# கொவிட் – 19 இற்குப் பிற்பட்ட முடக்கிவிடல் நிவாரணங்களும் இயல்புநிலை மீட்சிக்கான கொள்கை விதப்புரைகளும் : கொழும்பு மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள்நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற ஊழியர்கள் மற்றும் பாதிப்புக்கு இலக்காகக்கூடிய சமுதாயங்கள்

Women and Media Collective
Established 1984

Norwegian Embassy
Colombo

# கொவிட் – 19 இற்குப் பிற்பட்ட முடக்கிவிடல் நிவாரணங்களும் இயல்புநிலை மீட்சிக்கான கொள்கை விதப்புரைகளும் : கொழும்பு மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள்நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற ஊழியர்கள் மற்றும் பாதிப்புக்கு இலக்காகக்கூடிய சமுதாயங்கள்

**2020 ஆனி 22**

துரிதமாக விரிவடைந்து வருகின்ற கொவிட் -19 வைரசுக்குப் பிரதிபலிப்புச்செய்து உலக சுகாதார தாபனம் 2020 பங்குனி 11ஆம் திகதி நோயின் பரவலை உலகளாவியரீதியில் பெருவாரியாகப் பரவுகின்ற நிலையைப் பிரகடனஞ் செய்தது. உலகம் முழுவதிலுமுள்ள ஏனைய அனைத்து நாடுகளைப்போன்றே இலங்கையும் தனித்துவமான மற்றும் வழமைக்குமாறான வழிமுறைகள் ஊடாக அதற்கான பிரதிபலிப்பினைச் செய்தது. அவ்விதமாக மேற்கொண்ட வழிமுறைகள் மத்தியில் நோய்த் தொற்றினைத் தடுக்கும்பொருட்டு முழுத்தீவும் முடக்கப்பட்டது. கடுமையாக நடைமுறைப்படுத்திய ஊரடங்குச் சட்டம் மூலமாக இடப்பெயர்வினை மட்டுப்படுத்துதல் உள்ளடக்கப்பட்டது.

கீழே காட்டப்பட்டுள்ள கொள்கை விதப்புரைகள்,கொவிட் – 19 தொடர்பாகக் காட்டப்பட்ட பிரதிபலிப்புகள் நகர்சார் வறிய மக்கள் மற்றும் கொழும்பின் குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயங்கள் மீது தாக்கமேற்படுத்திய விதத்துடன் தொடர்புடையவையாக அமைவதோடு, நகர்சார் குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயங்களில் வசிக்கின்ற ஊனமுற்ற, வயோதிப, LGBTIQ+ சமுதாயத்தினர் மற்றும் பாலியல் சேவை வழங்குனர் போன்றோர்பாதிப்புக்கு இலக்காகக்கூடிய ஏனைய குழுக்கள் தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய இடையீடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றது.

இவ்விதப்புரைகள் பிரதானமாக சமூக பொருளாதார சிக்கல்களை மையமாகக் கொள்வதோடு மேற்படி சமுதாயங்களுடன் தொடர்புடைய பொதுச்சுகாதாரப் பிரதிபலிப்புகள் சம்பந்தமாக விசாரித்தறிவது கிடையாது. எவ்வாறாயினும் தொற்றுநோய்,அதற்குக் காட்டப்பட்ட பிரதிபலிப்புகளின் தன்மை மற்றும் நகர்சார் குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் வறிய மக்கள் மீது மிகவும் மாறுபட்ட மற்றும் ஏற்றத்தாழ்வுமிக்கவகையில் தாக்கமேற்படுத்தியது என்பதை நாங்கள் ஆரம்பத்திலேயே கூறிவைக்க விரும்புகிறோம். கீழே காட்டப்பட்டுள்ள விதப்புரைகள் வேரூன்றியுள்ள முறைமையொன்றிலும் கட்டமைப்புச் சார்ந்த ஏற்றத்தாழ்வுகளினதும் பெறுபேறாக அமைகின்ற இவ்வித்தியாசங்களின் பிரதிபலிப்பாகும்.

## விதப்புரைகள்

### கொழும்பு மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள்

*குறுகியகாலரீதியான*

1. உதவிகள் அரசியல்மயப்படுத்தப்படலாகாது என்பதோடு ஜனாதிபதி நிதியத்திலிருந்தோ அமைச்சரவை அங்கீகரித்த வேறு நிதியங்களிலிருந்து வழங்கப்படுகின்ற உதவிகள் மக்களின் அரசியல் கடப்பாடுகளைப் பொருட்படுத்தாமல் நியாயமானவகையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். அரசினால் வழங்கப்படுகின்ற மானியங்கள் ஏதேனும் அரசியற் கட்சிக்கு உடைமையாக்கப்படலாகாது என்பதோடு பாராளுமன்றத் தேர்தல் வரையான காலப்பகுதிக்குள் அரச சொத்துக்கள் முறையற்றவிதத்தில் பாவிக்கப்படலாகாது.

2. முறைசாராத பிரிவின் அனைத்து ஊழியர்களினதும் மற்றும் நாளாந்தச் சம்பளம் பெறுனர்களினதும் அவசியப்பாடுகளை நிவர்த்திசெய்யும்பொருட்டு இலக்காகக் கொள்ளப்பட்ட வாழ்வாதாரங்களை இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்கான செயற்றிட்டங்கள் அறிமுகஞ் செய்யப்படல் வேண்டும். தொடர்ந்தும் கடன்படடுதலின்றித் தமது வாழ்வாதாரத்தைத் தொடங்க நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களுக்கு இயலச்செய்விக்கும்வகையில் குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்காகக் கொடுப்பனவொன்றினைச் செலுத்துவதன் மூலமாக அவர்களுக்கு உதவிபுரிதல் வேண்டும்.(2020 பங்குனி தொடக்கம் புரட்டாதிவரை)

3. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொடர்மாடி இருப்பிடக் கூறுகளில் வசிக்கின்றவர்களின் பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல்களுடன் மாதாந்த வாடகை செலுத்துதலை ஆறு மாதங்களுக்காக இரத்துச்செய்தல் வேண்டும்.(2020 பங்குனி தொடக்கம் ஆவணிவரை) இப்பணம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு நேரடியாகவே செலுத்தப்படல் வேண்டும்.

4. 2020 பங்குனி தொடக்கம் ஆவணிவரை வீட்டு உரிமையாளர்களுக்கு நேரடியாக வாடகையைச் செலுத்துவதன் மூலமாகக் குறைந்த வருமானம் பெறுகின்ற குடியிருப்புவாசிகளின் வாடகைக்கான கிரயத்தை உள்ளடக்கத்தக்கதாக ஆக்கும்பொருட்டுத் திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும். வீட்டு உரிமையாளர்கள் தமது செலவுகளுக்காக வீட்டு வாடகையில் தங்கியிருப்பதாலும் வாடகையைச் செலுத்தாமை காரணமாகப் பெண்களாக அமைகின்ற வீட்டு உரிமையாளர்களை அதிக பாதிப்புக்கு இலக்காக்கிப் பலர் வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் நிலையை எதிர்நோக்க வேண்டுமென்பதாலாகும்.

5. தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பிரதேச மட்டத்தில் நிவாரணங்களை பகிர்ந்தளிப்பதற்காக உதவும்பொருட்டு ஆண் – பெண்,இனத்துவ மற்றும் மதம்சார்ந்த சமநிலைகொண்டதாகக் கொழும்பு நகரசபை ஊடாகச் சமூக மூலக் குழுக்களை நிறுவுக.

6. சமுதாயத்திற்கு நிவாரணங்களைப் பகிர்ந்தளிக்கையில் ஆண்–பெண் சமூகநிலை அவசியப்பாடுகளை இனங்கண்டு நிவர்த்திசெய்யக்கூடியவகையில் நிவாரணப் பணிகளின்போது பெண் உள்ளூராட்சிப் பிரதிநிதிகளிடமும் சமூக மூலப் பெண் குழுக்களிடமும் விசாரித்தறிக.

7. நீர் மற்றும் கைகளைக் கழுவுவதற்கான வசதிகளுக்கான அதிகரித்த வாய்ப்பினை மக்களுக்கு வழங்கும்பொருட்டு குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயங்கள் வசிக்கின்ற பிரதேசங்கள் மற்றும் பொது இடப்பரப்புகளில் உட்கட்டமைப்பு வசதிகளில் கொழும்பு மாநகரசபையும் அரச நிறுவனங்களும் அதிகரித்த முதலீடுகளைச் செய்தல் வேண்டும்.

8. முடக்கிவிடுதல் மற்றும் அதிலிருந்து விடுபடுதலுக்கான நிலைமாறுகாலத்தில் வருமானங்களை இழத்தல் காரணமாக ஊட்டச்சத்துமிக்க உணவுகளைப் பெற்றுக்கொள்ள இயலாமை தோன்றக்கூடிய வாய்ப்புகள் நிலவுகின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயங்கள் மற்றும் நகர்சார் வறிய மக்களுக்கு அத்தியாவசியமான ஊட்டச்சத்துநிறைந்த உணவு வழங்கப்படுவதை உறுதிசெய்யும்பொருட்டு விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுலாக்குக.

*<u>நீண்டகால ரீதியிலான</u>*

1. அடிமட்டத்தில் இயங்கிவருகின்ற சமூக மற்றும் சமுதாய வலையமைப்புகளைப் பலப்படுத்தி அரசாங்கத் தகவல் மூலங்களுக்கான இலகுவான அணுகுமுறையற்ற சமுதாயங்களை நெருங்குவதற்காக உடனடியாக சமுதாயத்திற்கு மாற்றியனுப்புவதற்காக அவர்களுக்கு நம்பகத்தன்மைமிக்க தகவல்களைப் பெற்றுக்கொடுக்கவும்.

2. தற்போது நடைமுறையில் உள்ள சமுர்த்தி போன்ற சமூகப் பாதுகாப்புப் பொறியமைப்புகளை மீள்பரிசீலனை செய்து அ) நலன்பெறுனர்களுக்கான தகவுதிறன்களை இற்றைப்படுத்துக. ஆ) மாதாந்தக் கொடுப்பனவு போதுமானதும் வாழ்க்கைச் செலவினை அடிப்படையாகக் கொண்டதுமானதென்பதை உறுதிப்படுத்துக.

3. அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் சுயதொழில்களை ஆரம்பிக்கும்பொருட்டுக்குறைந்த வருமானம் பெறுனர்களுக்காக அடிப்படை பணத்தொகையை வழங்கி அவர்களின் உற்பத்திகளுக்கான சந்தையை உருவாக்கிக்கொடுக்க உதவி வழங்குக. தொழில்சார் பயிற்சி தொடர்பில் ஆர்வம் காட்டுகின்றவர்களுக்குஅவர்களுடன் தொடர்புடைய சூழலுக்கு ஒத்துவரக்கூடிய தொழிலுக்கான பயிற்சியை வழங்குக.

4. நகரத்தில் உள்ள நாளாந்த சம்பளம் பெறுகின்ற ஊழியர்கள் மற்றும் வீடற்ற ஆட்களுக்குப் போதுமானதும் கட்டுப்படியானதுமான வாழிடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும். அதன் மூலமாக அவர்களுக்கு நீர் மற்றும் துப்பரவேற்பாடுகளை அணுகுவதற்கு இயலுமானதாக அமைவது மாத்திரமன்றி அவர்களுக்கு நோய்த் தொற்றுவதற்கான பாதிப்புக் குறைவடைவதோடு அவசியமேற்படுமிடத்து சமூக இடைவெளியைப் பேணிவரவும் தனிமைப்படுத்தலுக்கு இலக்காக்கும் இயலுமையும் உருவாகும்.

5. நிகழ்கால மாதிரியானது சமுதாயங்களின் அவசியப்பாடுகளைப் போதியளவில் நிவர்த்திசெய்யாமையால் வறிய நகர்சார் மக்களுக்காக நிலவுகின்ற நகர்சார் மறுமலர்ச்சிக் கருத்திட்டங்களைத் தொடர்மாடி கட்டடத் தொகுதிகள் போன்ற வீடமைப்புக் கருத்திட்டங்கள் மீள்பரிசீலனை செய்யப்படல் வேண்டும். இருப்பிடக் கூறுகள் வீடமைப்புத் தொகுதிகள் மற்றும் மீள் இடஅமைவு செயற்பாங்குகள் திட்டமிடப்பட்டுள்ள விதமானதுபெண்கள்மீது சமமற்றவகையில் பாதிப்பினை ஏற்படுத்துவதோடு அவர்களில் ஒருசிலர் பதிவினை மாற்றியமைத்த பின்னர் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகின்றனர். புதிய திட்டமிடல்களில் இருப்பிடக்கூறுகளின் அளவு,பசுமை மிகுந்த பொது இடப்பரப்புகள்,பொதுவாகக் கைகளைக் கழுவுகின்ற வசதிகளுக்கான அதிகரித்த அணுகல் மற்றும் நிலையானகட்டடங்கள் மீது கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

6. மீண்டும் தொழில்களுக்குச் செல்கையில் பெண்களுக்கு உதவும்பொருட்டு குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்காக இலவச /மானியங்களின் அடிப்படையில் இயங்கிவருகின்ற பகல்வேளைப் பராமரிப்பு நிலையங்களை நிறுவுக. இது சமூக மூல அமைப்புகள் ஊடாக முகாமை செய்யப்பட இயலுமென்பதோடு அவசியமான வளங்களை அரசாங்கம் வழங்க முடியும்.

7. கொவிட்-19 இயல்புநிலை மீட்சிக்கான நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் மற்றும் அமுலாக்கும்பொருட்டு நிலவுகின்ற மற்றும் உருவாக்க இடமுள்ள பல்வேறு பொறியமைப்புகளில் ஆண்–பெண் சமூகநிலை மற்றும் இனத்துவ சமநிலையை ஏற்படுத்தவும்.

8. நெருக்கடியான நிலைமைகள் போலவே நீண்டகால இயல்புநிலை மீட்சிச் செயற்பாங்குகளில் வினைத்திறன் மற்றும் செயல்விளைவு கொண்டதாக ஈடேற்ற கூட்டுறவு இயக்கத்திற்கு (பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள்,கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்,உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் ) இயலுமானவகையில் அவ்வியக்கத்தைப் பலப்படுத்தவும்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

1. பாதிப்புக்கு இலக்காகிய பெண்கள் மற்றும் மனைசார் அல்லது பாலியல் பங்காளியின் வன்முறை பாதிப்புக்கு இலக்காகியுள்ள,காயமுற்றுள்ள மற்றும் முடக்கிவிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் வன்முறை தலைதூக்குகின்ற சூழமைவில் முறைசார்ந்த முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ள அல்லது பாதுகாப்பு அல்லது பிறிதோர் இடத்தில் குடியமர்த்தப்படக் கோரிக்கை விடுத்துள்ள பிள்ளைகளுக்காக அரசாங்கத்தின் ஒத்துழைப்புக் கிடைக்கின்ற பாதுகாப்பான வாழிடங்களை அறிமுகஞ் செய்யவும்.

2. பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கவனிப்பு ஆகிய இரண்டுக்காகவும் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து அறிக்கைகள் மற்றும் அவசர வேளைகளுக்குப் பிரதிபலிப்புச் செய்யும்பொருட்டுத் துரித பொலிஸ் பிரதிபலிப்பினை உறுதிசெய்து கொள்ளவும்.

3. சிறுவர்கள் துஷ்ப்பிரயோகங்களுக்கு அல்லது கவனியாமல் விடப்படுதலுக்கு இலக்காவதில்லை என்பதை உறுதிசெய்யும்பொருட்டு சமூக செயற்பாட்டாளர்கள் அல்லது சமூக ஊழியர்கள் ஊடாகத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலமாக ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் சிறுவர் இல்லங்களில் உள்ள அல்லது உறவினர்களுடன் தங்கவைக்கப்பட்டுள்ள சிறுவர்களின் நல்வழியுரிமையை உறுதிசெய்க.

4. குறிப்பாக அவசரகால நிலைமைகளில் வீட்டு வன்முறைகள் தொடர்பான சம்பவங்களின்போது துரித பிரதிபலிப்பனைச் செய்வதற்காகப் பொலிஸ் வழிகாட்டுநெறிகள் தயாரிக்கப்படுவதையும் அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுவதையும் உறுதி செய்து கொள்ளவும்.

5. தடுப்புச் செய்திகள்மற்றும் சேவை ஒத்துழைப்பினை அணுகுதல் பற்றிய செயன்முறைத் தகவல்களுடன் நெருங்கக் கடினமான மற்றும் உயர் பாதிப்பைஎதிர்கொண்ட வீடுகளுக்குள் பிரவேசிக்கும் பொருட்டுத் தற்போது அடிமட்டத்தில் உள்ள சுகாதாரக் கவனிப்புப் பணியாட்டொகுதியினரை (பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள்,பொதுச் சுகாதார தாதி உத்தியோகத்தர்கள்) ஒன்றுதிரட்டச் சுகாதாரப் பிரிவிற்கு இயலுமையைப் பெற்றுக்கொடுக்கவும்.

# பாதிப்பிற்கு இலக்காகக்கூடிய சமுதாயங்கள்

## முதியோர்களும் விசேடதேவையுள்ளோர்களும்

*<u>குறுகியகாலரீதியான</u>*

1. குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்த முதியோர்களுக்காகவும் ஊனமுற்றவர்களுக்காகவும் ரூ. 5000 கொடுப்பனவினை 2020 பங்குனி மாதத்தில் இருந்து ஆறு மாதங்களுக்காக நீடிக்கவும். அதற்கிணங்க கொவிட் – 19 பெருவாரியாகப் பரவுகின்ற நோய் காரணமாக வருமானத்தில் தாக்கமேற்பட்ட குடும்ப அங்கத்தவர்களுக்குச் சுமையின்றித் தமது சுகாதார மற்றும் பிற அவசியப்பாடுகளை நிவர்த்திசெய்துகொள்ள இயலுமானதாக அமையும்.

2. பெருவாரியாகப் பரவுகின்ற நோய் காரணமான பாதிப்புக் குறைவடையும்வரை குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் உள்ள விசேட தேவை நிலவுகின்ற மற்றும் தனது நோய்நிலைமைக்காக உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள இயலாமற்போன முதியோர்களுக்காகவும் ஊனமுற்றவர்களுக்காகவும் மருந்துகளையும் உணவினையும்

வழங்குதல்,வீடுகளுக்குச் சென்று மருத்துவ ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் அவசரவேளையில் போக்குவரத்துப் போன்ற அவசியமான ஒத்துழைப்பினை வழங்குதல்.

3. முதியோர் மற்றும் ஊனமுற்றவர்கள் மீது பக்கச்சார்புகொண்ட மற்றும் பாரபட்சம் காட்டப்படுதல் கிடையாதென்பதை உறுதிசெய்து கொள்க. மரபார்ந்த முறைகள் ஊடாக உறுதிசெய்து கொள்ள இயலாத உளரீதியான கோளாறுகள்,வலிப்பு, எச்ஐவி போன்ற கட்புலனாகாத கோளாறுகளால் பீடிக்கப்பட்டுள்வர்களையும் உள்ளடக்கி அத்தகைய கோளாறுகள் உள்ள ஆட்களின் குழுக்களையும் கொடுப்பனவுகளுக்கான தகைமைகொண்டவர்களாகக் கருதுக.

*நீண்டகால ரீதியான*

1. முடக்கிவிடுதல் மற்றும் பிற அவசரவேளையில் பிரதிபலிப்புகள் போன்ற சந்தர்ப்பங்களில் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்த முதிய பெண்கள் எதிர்நோக்க இடமுள்ள ஆபத்துகளைக் கருத்திற்கொண்டு நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அத்தகைய பெண்களை இனங்காண்கின்ற மற்றும் அவர்களுக்கு உதவிபுரிகின்ற அளிப்புச் செயற்றிட்டமொன்றை அறிமுகஞ் செய்க.

2. “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு முதியோர் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் மாதாந்தக் கொடுப்பனவினை ரூ. 2500 வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவும்.

3. “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளவாறு வயது 65 வருடங்களைத் தாண்டிய முதியோர்களுக்கு விதந்துரைக்கப்பட்ட மருந்துப்பொருட்களைக் கொள்வனவுசெய்ய இயலுமானவகையில் மானிய செயற்றிட்டமொன்றை அறிமுகஞ் செய்க.

## LGBTIQ+ சமுதாயமும் பாலியல் தொழிலாளர்களும்

1. ஓரங்கட்டப்பட்ட இச்சமுதாயங்களுக்கு நிவாரணங்களையும் ஏனைய உதவிகளையும் பெற்றுக்கொடுக்க இயலச்செய்விப்தற்காக மேற்படி திறந்துவிடப்பட்டுள்ள சமுதாயங்களுக்கு, அவர்களுக்கு விசுவாசமான அரச சார்பற்ற அமைப்புகள் அல்லது சமூகமூல அமைப்புகள் ஊடாகச் சட்டமுறையான,பாதுகாக்கப்பட்ட பதிவுசெய்வதற்கான மாற்றீடு வழங்கப்பட வேண்டும். அத்துடன் அந்த அமைப்புகளுக்கு அத்தகைய பதிவுசெய்தலை மேற்கொள்வதற்கான அதிகாரம் இருத்தலும் வேண்டும்.

2. அனைத்து அரச அலுவலர்களாலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய விரிவான பாரபட்சம் காட்டப்படுதலுக்கு எதிரான வழிகாட்டல்களைத் தயாரிக்கவும்.

3. பாதிப்பிற்கு இலக்காகக்கூடிய சமுதாயங்கள் துன்புறுத்தல்களுக்கு இலக்காகாதிருக்கும்பொருட்டு பதிவுசெய்தல் செயற்பாங்கு ஊடாகத் திரட்டப்பட்ட பிரத்தியேகத் தகவல்களின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்தவும்.

**இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள்:**
இணைப்பு 1 – கொவிட் -19 பிரதிபலிப்புகளின் ஆண்– பெண் சமூகநிலைத் தாக்கம் : கொவிட் – 19 முடக்கிவிடுதல் காலப்பகுதிக்குள் கொழும்பு நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற ஊழியர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள், விரே பல்தசார்

**இணைப்பு 2 – மீளாய்வும் விதப்புரைகளும்**
நகர்சார் குறைந்த வருமானம் பெறுகின்ற, வறிய சமுதாயங்கள் மற்றும் கொழும்பின் ஏனைய பாதிப்புக்கு இலக்காகக்கூடிய குழுக்களுடன் செயலாற்றுகின்ற செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்கள் குழுக்களுடன் கருத்துகளை வினவி பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினரல் தயாரிக்கப்பட்டது.

**பங்களிப்பினை நல்கியோர்**
இரோமி பெரேரா
விரே பல்தசார்
குமுதினி சமுவேல்
நிர்மாணி லியனகே
சன்சியா பிறவுன்
ஹரினி பர்னாந்து
ஏப்ராயிம் ஷட்ரச்

# இணைப்பு 1

## கொவிட் -19 பிரதிபலிப்பின் ஆண் –பெண் சமூகநிலைத் தாக்கம் – கொவிட் 19 முடக்கிவிடுதல் காலப்பகுதிக்குள் கொழும்பு நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற தொழிலாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள்

விரெய் பல்தசார்

தீவினை உத்தியோகபூர்வரீதியாக முடக்கிவிடச் சில நாட்களுக்கு முன்பிருந்தே நாளாந்தச் சம்பளம் பெறுகின்றவர்களினதும் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களினதும் வாழ்க்கை கணிசமானவகையில் சிக்கலானதாக அமைந்தது. பங்குனி 13ஆம் திகதி பாடசாலைகள் மூடிவிடப்பட்டமையும் அதற்குச் சில தினங்களுக்குப் பின்னர் பிரயாணங்கள் மட்டுப்படுத்தப்பட்டமையும் பங்குனி 20ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டமையும் காரணமாகப் பெரும்பாலானோர் தமது அன்றாட அவசியப்பாடுகளை ஈடேற்றிக்கொள்ள இயலாமற் போனமையால் நெருக்கடியான நிலைமையை எதிர்நோக்கினர். கொழும்பில்வசிப்போரில் ஒருபகுதியினர் பண்டங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளைத் தம்மாற் பெற்றுக்கொள்ள இயலுமென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டுப் புதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்பாடுசெய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு நகர்சார் வறிய சமுதாயத்தினர் அத்தியாவசியப் பண்டங்களைத் தாம் கொள்வனவுசெய்ய எவ்விதமான வருமான வழிவகையும் இன்மையால் நிர்க்கதி நிலையுற்றனர்: “மரக்கறி லொறி வந்தது,எனினும் எதையுமே வாங்கக் கையில் காசு கிடையாது”

இங்கு கீழே காட்டப்படுவது கடந்த பத்துவாரங்களில் தமது வாழ்க்கைப் போராட்டம் தொடர்ச்சியாக மேலோங்கிய கொழும்பு மாவட்டத்தில் வசிக்கின்ற மற்றும் தொழில்புரிகின்ற பெரும்பான்மையினரான பெண்களின் குரலாகும்.

ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்ட பின்னரும்கூடத் தமது கடன்படுநிலைக்குக் காரணமாக அமைந்த நிதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை காரணமாக,நகர்சார் வறிய பகுதியினரின் பெரும்பாலானோருக்கு வருமானம் கிடைப்பதில்லை என்பதும் அதன் மூலமாக அவர்கள் தொடர்ந்தும் அல்லற்படுகின்றனரென்பதும் யதார்த்தமாகும்.

(அ) அவர்களுக்கு ஏற்கெனவே தமது தொழில்கள் அற்றுப்போய் அல்லது அற்றுப்போக அண்மித்தநிலை காணப்படுகின்றது.

(ஆ) முடக்கிவிடப்பட்டிருந்த காலப்பகுதிக்குள் நுகர்வுத் தேவைகளுக்காக அவர்கள் தம்வசமிருந்த அனைத்தையும் அடகுவைத்து அல்லது அவர்களின் கடனெடுக்கும் அனைத்து வழிகளும் நிறைவடைந்துள்ளதோடு, அதனால் புதிய வாழ்வாதார மாற்றீடுகளை கண்டறியும்பொருட்டு அவசியமான மூலதனம் அவர்களிடம் கிடையாது.

(இ) குறைந்தபட்ச உதவிகள் தவிர (நிதி மற்றும் நுகர்வுக்கான பண்டங்களின் கொடைகள்) பலவீனமான எனினும் அபிவிருத்தி செய்யக்கூடிய இயலுமை நிலவுகின்ற முறைசாராத பிரிவின் வருமானத் தோற்றுவாய்களை இனங்காணவும் உயர்ந்த/ விருத்திசெய்ய உபாயமுறைசார்ந்த உதவி முறைமையொன்று கிடையாது.

(ஈ) அனுகூலமற்ற உடன்படிக்கைகளை (நிதி மற்றும் வேறுவிதமாக) செய்துகொள்ள இந்நிர்க்கதியுற்ற ஆட்களுக்கும் குடும்பங்களுக்கும் நிர்ப்பந்தித்த முடக்கிவிடும் காலப்பகுதி மீண்டும் இயல்புநிலைக்கு வருவதற்காக அவர்கள் கொண்டுள்ள இயலுமையைத் தொடர்ந்தும் மட்டுப்படுத்தி அவர்கள்மீது மேலதிக சமூக மற்றும் நிதிரீதியான சுமையைச்சுமத்தி உள்ளது.

(உ) பாடசாலைகளை மீண்டும் திறத்தல்,ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்துறைப் பிரிவுகளின் செயற்பாடுகளை மீண்டும் திறந்துவிடல் போன்ற திட்டவட்டமான செயற்பாடுகளின்மீது தங்கியுள்ள முறைசாராத பிரிவைச்சேர்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள குடும்பங்களையும் ஆட்களையும் இனங்கண்டேனும் வாழ்வாதாரங்களை மாற்றுவதற்காக ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை.

(ஊ) அதிகரித்த பொறுப்புகள் மற்றும் தமது வாழ்வாதார செயற்பாடுகளின் எதிர்காலம் பற்றி கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு நிலவாமை காரணமாகப் பெண்களுக்குக் கணிசமான சவால் தோன்றியுள்ளது.

**<u>கதை – திருமதி ஏ.எப். றிஷாட்</u>**

திருமதி ஏ.எப் றிஷாட் நான்கு பிள்ளைகளின் தாய்.பிள்ளைகள் அனைவரும் பாடசாலை செல்லும் வயதில் உள்ளனர். அவரின் தாயாரும் சகோதரியும் கூடவே வசிக்கின்றனர். இவர் ஒருமுனைப்பான சமுதாயத் தலைவியாவார். திருமதிறிஷாட்டின் கணவன் முச்சக்கரவண்டிச்சாரதியாவார். முழுக் குடும்பமும் அவரது வருமானத்திற் தங்கியிருப்பதோடு சேமித்த பணத்தொகை அவர்களிடம் கிடையாது. பிள்ளைகளின் போஷாக்கிற்காகப் பாடசாலை ஊடாக வருடத்தின் அதிகமான காலப்பகுதிக்குள் வழங்கப்படுகின்ற ஊட்டச்சத்துமிக்க உணவுமீது அவர்கள் நம்பிக்கை வைத்துள்ளதோடு விடுமுறை மாதத்திற்காக ஏதேனும் பணத்தொகையை ஒதுக்கும் வழமை இவர்களிடம் நிலவியது. பாடசாலைகள் மூடப்பட்ட பின்னர் போதியளவிலான உணவு பெற்றுக்கொள்வதற்கான வழிமுறையொன்று குடும்பத்திற்குக் கிடையாது. அவர்களின் வருமானமும் அற்றுப்போயுள்ளது. கொழும்பு மாநகர சபையிடமிருந்தும் தனிப்பட்ட நன்கொடைவழங்குனர்களிடமிருந்தும் அவர்களுக்குப்பொருட்கள் கிடைத்துள்ளன. எனினும் அவை போதுமானவையாகவோ அல்லது நிலையானதாகவோ அமையவில்லை.

**விதப்புரைகள்**

பிள்ளைகள் பங்குனி முதலாம் வாரத்தில் இருந்தே வீட்டில் தங்கி இருப்பதால் ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படுகின்ற நன்கொடை குடும்பத்திற்கு போதுமானதாக அமையவில்லை. தனிப்பட்ட கொடையாளிகள் நேரடியாக அவர்களின் குடும்பத்திற்கு உதவி புரிந்துள்ளனர்.

**துரித –**

- இவ்வளவு பெரிய குடும்பமொன்றை பராமரிக்க ரூ. 500போதுமானதாக அமையமாட்டாது. ஒரு குடும்பத்திற்காக வழங்கப்படுகினற பணத்தொகை அரசாங்கத்தினால் மீள்பரிசீலனை செய்யப்படுவது அவசியமாகும். அனைவருக்கும் ஒரே அளவான பணத்தொகைக்குப் பதிலாக வீட்டில் உள்ள ஆட்களின் எண்ணிக்கையின் பேரில்,சமுர்த்தி போன்ற தரப்படுத்திய கட்டமைப்பு மிகவும் நியாயமான தீர்வாக அமையும். அவ்விதமாகச் செலுத்தப்படுகின்ற குறைந்தபட்சத் தொகை ரூ. 5000/=இற்கு குறைந்ததாக அமைதலாகாது.

**நீண்டகால ரீதியான –**

- வெறுமனே நுகர்வுக்காக வழங்கப்படுகின்ற நிதிரீதியான கொடைகள் மனிதர்களை “தங்கிவாழ்வோராக” மாற்றி அவர்கள் “இறக்காமல் உயிர்வாழ்பவர்கள்” என்பதை மறக்கச் செய்கின்றது. எனவே இந்த ரூ. 5000 கொடுப்பனவு தங்கிவாழும் மனநிலையைத் தொடர்ந்தும் அவர்கள் மீது சுமத்துகின்ற “புண்ணியத்திற்காகக் கொடுக்கின்ற உணவாக” மாறுவதைப் பார்க்கிலும் புதிய சாதாரண வாழ்க்கைக்குப் பழக்கப்படுத்துவதற்காக அவர்களுக்கு உதவுகின்ற ஏணியின் முதலாவது அடியெடுப்பாக மாத்திரம் அமையவேண்டியது முக்கியமானதாகும்.
-

தம்மிடம் தற்போது நிலவுகின்ற திறமைகளை அடிப்படையாகக்கொண்டு புதிய வாழ்வாதாரச் செயற்பாடுகள் பற்றி நினைத்துப் பார்க்க,திட்டமிட மற்றும் அமுலாக்க மக்களுக்கு வாய்ப்பினையும் ஒத்துழைப்பினையும் வழங்கவேண்டியது அவசியமாகும். அதன் மூலமாக எதிர்கால அதிர்ச்சியொன்றின்போது அவர்களின் நம்பிக்கை மற்றும் எதிர்ப்பாற்றலை வளர்த்தெடுக்கவும் இயலும்.

சிறுவர்களின் போஷாக்குத் தேவைகள் தாய்மார்களின் தீவிரமான கவனத்திற்கு இலக்காகின்ற விடயமாகும். சிறுவர்களுக்காக ஆரோக்கியமிக்க உணவினை வழங்குகின்ற சுமையினைக் குறைக்கின்ற சமுதாய சமையலறைகளை நிர்மாணித்தல்,உணவு வங்கிகள் மற்றும் ஏனைய பொறியமைப்புகளை நிறுவுதல் போன்ற சமுதாய மட்டத்திலான தூண்டுதலளித்தல்கள் தமது வாழ்வாதாரத் திட்டங்கள் பற்றி மீள்பரிசீலனைசெய்யப் பெற்றோர்களுக்கு அதிக சுதந்திரத்தை வழங்குகின்றன. உணவு வங்கிகளுக்கு வறியவர்களுக்காக சலுகை விலைக்கு உணவு பெற்றுக்கொள்ள இயலுமென்பதோடு வருடம் பூராவிலும் அவற்றை அமுலாக்குதல் மூலமாக அதிக வாழ்வாதார வாய்ப்புகள் உருவாகக்கூடும்.

- அனர்த்த நிலைமைகளின்போது நிவாரணங்களைப் பகிர்ந்தளிக்கும் செயல்விளைவையும் வினைத்திறனையும் உயர்த்த உதவும்பொருட்டு சமுதாயம்,அரச மற்றும் சிவில் சமூக பிரிவுகளுக்கிடையில் வலையமைப்பினை பலப்படுத்துதல் சம்பந்தமாக முன்னுணர்ந்து செயற்படுதல். அனர்த்தத்தின்போது நிவாரணத் தொழிற்பாடுகள் பற்றிய தரவுகளை வெளிப்படையாகப் பெற்றுக்கொள்ள இயலுகின்றமையானதுஅதற்கு இணையான முக்கியத்துவமாகஅமைகின்றது. எடுக்கப்படுகின்ற முயற்சிகள் இரட்டிப்பாக்கப்படுதலையும் வளங்களின் விரயம்குறைக்கப்படுதலையும் அதன் மூலமாக மேற்கொள்ள இயலும். அதற்காக நெருக்கடி நிலைமைகளின்போது கூட்டான மற்றும் செயல்விளைவுமிக்க முகாமைத்துவத்திற்கான அத்திவாரத்தை இடுவதற்காக அனர்த்தங்களுக்கு முன்னராக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள்,உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள்/உத்தியோகத்தர்கள் போன்ற அரச உத்தியோகத்தர்கள் கூட்டாகச் செயலாற்றவேண்டியது அவசியப்படுத்தப்படும். அனைத்துப் பிரிவுகளினதும் முன்முடிவு செய்யப்பட்ட செயற்பாட்டு சங்கிலிகள் அவசியமானவிடத்துத் தன்னிச்சையாக இயங்குகின்ற நகர விரிவாக்கல் கூட்டுச் செயற்பாட்டுக்கு அது வழிசமைக்கும். இது நிகழ்வதற்காகக் கொழும்பு மாநகரசபை/பிரதேச செயலகங்கள் அத்தகைய கூட்டு முயற்சிகளுக்கு வருடம் பூராவிலும் தலைமைத்துவம் வழங்க வேண்டுமென்பதோடு நம்பிக்கையானதும் மிகுந்த பலமுடையதுமான தொடர்பாடலொன்றைக் கட்டியெழுப்பும்பொருட்டு நேரத்தையும் உழைப்பையும் ஈடுபடுத்த வேண்டும். இந்நீண்டகாலத் தொடர்பானது அரச நிறுவனங்களுடன் செயலாற்றுகையில் நிவாரணங்களைப் பகிர்ந்தளிக்கையில் அரசியல்மயப்படுத்தல் சம்பந்தமாகச் சிவில் சமூக அமைப்புகள் கொண்டுள்ள சந்தேகங்களைப் போக்க உதவுவதாக அமைவதோடு நல்லாட்சியின் ஆசீர்வாதத்தையும் கொண்டுவரும்.

**<u>கதை – புஷ்பா</u>**

புஷ்பா வீட்டில் சமைத்த சிற்றுண்டிகளை விற்பனை செய்கிறார். இளம்வயதுகொண்ட ஊனமுற்ற மகனொருவனின் தனித்த தாய். நாளாந்தச் சம்பளம் ஈட்டுகின்ற ஒருவராக வாழும்பொருட்டுக் கடும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். உறவினரொருவருக்குச் சொந்தமான சிறிய அறையொன்றில் அவர் தனது மகன் மற்றும் உறவுச் சகோதரியுடன் வசிக்கின்றார். பல வருடங்களாக அவர் சமுர்த்தி மானியப் பட்டியலில் சேர்ந்துகொள்ள முயற்சி செய்தபோதிலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதாவதுபட்டியல் திருத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவரைச் சேர்த்துக்கொள்வதாகக் கூறப்பட்டது. ரூ.5000 கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்தவேளையில் அவரால் அதனைப் பெற்றுக்கொள்ள இயலாமல் போகுமெனமீண்டும்மீண்டும் கூறப்பட்டது. பின்னர் இடம்பெற்ற சட்டமுறையான உரித்துரிமைசார் வாதப்பிரதிவாதங்களும், கிராம

அலுவலருக்கு,சமுர்த்தி அலுவலருக்கு மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்தின் அரசியல்வாதிக்குக் கொடுத்த தொலைபேசி அழைப்புகளுக்குப் பின்னர் அவருக்கு ரூ. 5000 உரித்தானது.

விதப்புரை

ரூ.5000 கொடுப்பனவு சம்பந்தமான தகவல்கள் சித்திரை 15ஆம் திகதி கலந்துரையாடப்பட்டபோதிலும் அவசியமானவர்களை மேற்படி தகவல்கள் முறைப்படி சென்றடையவில்லை. அதற்குப் பொறுப்பான ஆட்கள் எவரென்பது பற்றி குழப்பநிலைநிலவியதோடு அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள இயலாமல் போயிற்று.

***நீண்டகால ரீதியான –***

- சமுதாயத்துடன் குறிப்பாக ஸ்மார்ட் சாதனங்கள் /தொலைக்காட்சிகளை அணுகுவதற்கான வாய்ப்புகளற்றவர்களுடன் தகவல்களை பரிமாற்றிக் கொள்வதற்கான மிகவும் பயனுறுதிமிக்க முறையியல்களைக் கண்டுபிடிப்பது கடுமையாக விதந்துரைக்கப்படுகின்றது. அரச மையப்படுத்தப்பட்ட தகவல் திரட்டுகின்ற முறைமைகளிலிருந்து கைநழுவிச்செல்ல மிகுந்த இடமுள்ள வறிய குடும்பங்களை 100%இல் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்தும்பொருட்டு அடிமட்டத்தில் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இயங்குகின்ற சமூக/சமுதாய வலையமைப்புகளை பலப்படுத்துல் மிகவும் நம்பிக்கையான வழிமுறையாக அமையும்.

***<u>கதை – சுகதி</u>***

சுகதி சிறிய பிள்ளையொன்றின் தனித்த தாய். அவர் கொழும்பில் 3 வீடுகளின் மனைசார் சேவகி ஆவார். தொற்றுநோய்க்கு முன்னர் அவளுடைய பிள்ளையை முன்பள்ளியில் ஒப்படைத்த பின்னர் வேலைச்சுற்றுக்கிணங்க வீடுகளில் வேலை செய்தாள். குறைந்த வசதிகொண்ட பிரதேசமொன்றில் வசிப்பதன் காரணமாக அவளது எஜமான்கள் மூவரும் நாள் வரையறையின்றி அவளது சேவையை நிறுத்தினார்கள். ஊரடங்குச் சட்டம் அகற்றப்பட்டபோதிலும் அவளுக்கு இப்போது தொழில் கிடையாது. இதைப்போலவே பாடசாலைகளும் பகல்வேளைப் பாதுகாப்பு நிலையங்களும் திறக்கப்படாமையால் அவளது பிள்ளையை விட்டுச்சென்று தொழில் தேடிக்கொள்ள முயற்சிசெய்யவும் அவளுக்கு இயலவில்லை. அவளுடன் வசிக்கின்ற அவளது பெற்றோர்களுக்கு ரூ. 5000 கொடுப்பனவு கிடைத்தமையால் அவளுக்கு அது கிடைக்கவில்லை எனக் கிராம அலுவலர் கூறியுள்ளார். அதாவதுஅவளைத் தனியான குடும்ப அலகாகக் கருதுவதில்லை.

**விதப்புரை**

ஊரடங்குச் சட்டம் அகற்றப்பட்டபோதிலும் சுகதியைப் போன்ற பல பெண்களுக்குத் தமது பிள்ளைகள் மற்றும் முதியோர்கள் மீது கொண்டுள்ள கடப்பாடு காரணமாக வேலை செய்யாமல் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவள் வெளியில் உள்ள சந்தர்ப்பங்களில் தனிப்பட்டரீதியாக அவளது பிள்ளையைப் பார்த்துக்கொள்ள ஒருவரைத் தேடிக்கொள்வதற்கான நிதிப் பலம் அவளிடம் கிடையாது. அவளது மகனின் பகல்வேளைப் பாதுகாப்பிற்காகவே அவளால் அதிக செலவினை ஏற்க நேரிட்டுள்ளது.

சுகதிக்குச் சமுர்த்திக் கொடுப்பனவு கிடைப்பதில்லை. அவள் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவள் என்பதால் கிராம அலுவலர் அவளைக் கவனிக்காமல் விட்டுள்ளதாக அவள் தீவிரமாக நம்புகிறாள்.

**துரிதமான –**

குடும்ப அலகினை அடிப்படையாகக்கொண்டு ஒருசில பிரதேசங்களில் மக்களுக்குக் கொடுப்பனவு கிடைத்தபோதிலும் எல்லாப் பிரதேசங்களிலும் அவ்விதமாக இடம்பெறவில்லை. எவரையும் தவிர்த்துவிடாமல் எதிர்வரும் மாதங்களில் மிகவும் நியாயமான பகிர்ந்தளித்தல் உருவாகத்தக்கவகையில் மாவட்டச் செயலாளர்களால் உடனடியாக அமுலுக்கு வரத்தக்கதாக இப்பட்டியல்கள் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

***நீண்டகால ரீதியாக –***

- மானியத்தின் பேரில்இயங்கிவருகின்ற பகல்வேளைப் பராமரிப்பு நிலையங்கள் – குடும்பங்கள் தொடர்ச்சியாக வேலைசெய்வதற்காக ஒத்துழைப்பு நல்கும்பொருட்டு அதிகளவில் பகல்வேளைப் பராமரிப்பு நிலையங்களை நிர்மாணித்தலும் ஒழுங்குபடுத்துதல் தொடர்பில் நகரசபையின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். அரசாங்கத்தின் மேற்பார்வையின்கீழ் சமூக மூல அமைப்புகள் ஊடாக இலகுவாக முகாமைசெய்ய இயலுமென்பதால் இதனை அரசாங்கத்திற்குச் சுமையேற்படாதவண்ணம் அமுலாக்க இயலும்.

  வீட்டுவேலைசெய்வோர் உரிமைகள் மற்றும் சட்டங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொள்ளல். இந்த ஊழியர்கள் நகரத்தின் குறைந்த வருமானம் பெறுகின்ற குடியிருப்புகளுக்கு எதிராக அடிப்படையற்ற அபகீர்த்திக்கு இலக்காகாமை முக்கியமானதாகும்.

- தகவல்களைப் பரிமாற்றிக்கொள்ளும் பொறிமுறை முன்கூட்டியே முனைப்பாக இடம்பெறக்கூடியவகையில் கிராம அலுவலர் சமுர்த்தி அலுவலர்மற்றும் மக்களுக்கிடையில் மிகவும் பலம்பொருந்திய உறவுகளை உருவாக்குதலும் கட்டியெழுப்பதலும்.

***<u>கதை – மாலா</u>***

மாலாவும் அவளது கணவனும் புலம்பெயர் தொழிலாளர்களாவர்.தொழில்களைத் தேடியே அவர்கள் கொழும்பிற்கு வந்தபோதிலும் அது வெற்றியளிக்கவில்லை. தொழிலையோ அல்லது தங்குவதற்கான இடமொன்றையோ தேடிக்கொள்ள அவர்களுக்கு இயலாமல் போயிற்று. முடக்கிவிடப்பட்டு சில நாட்களிலேயே அவர்களுக்குத் தங்குமிடமோ உணவோ கிடைக்காமற் போயிற்று. மாலாவின் கணவனுக்குக் கடுமையான நோய்த்தொற்றுப் பீடிக்கப்பட்டுக் கடுமையாகச் சுகவீனமுற்றபோதிலும் சிறுபான்மை இனத் தம்பதிகள் என்பதால் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிசெய்வதிலான பாதகமானவிளைவுகளுக்கு அஞ்சியமையால் மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ள அவர்கள் அஞ்சினார்கள்.

**விதப்புரை**

மாலாவும் அவளது கணவனும் எவ்விதத்திலும் கவனிப்புக்கு எடுக்கப்படாத தொகுதியைச் சேர்ந்தவர்களாவர். வீடோ எந்தவிதமான உதவியோ இன்றி அவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து உதவிகள் கிடைக்காமையால் தங்குமிடத்திற்குப் போதுமான பணம் அவர்களிடம் இருக்கவில்லை. கொவிட் நோய் அறிகுறிகள் இருந்தபோதிலும் எந்தவிதமான அரவணைப்பும் இன்றி வீதியில் தனது மனைவியைத் தனியே விட்டுச்செல்ல அஞ்சியமையால் கணவன் வைத்தியாசலையில் அனுமதிக்கப்படவில்லை.

**துரிதமான –**

நெருக்கடி நிலைமையின்போது வீடற்றவர்கள், குறிப்பாக இன்னமும் பாதிப்புக்குஇலக்காகியுள்ள பெண்கள்.

# இணைப்பு 2

**மீளாய்வாகும்**

**கொவிட் -19 பிரதிபலிப்பின் ஆண் –பெண் சமூகநிலைத் தாக்கம் – கொவிட் 19 முடக்கிவிடுதல் காலப்பகுதிக்குள் கொழும்பு நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற தொழிலாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் இலங்கையில் கொவிட் - 19 பெருவாரியாகப் பரவும் நோய்க்கான பிரதிபலிப்பாகக் கொழும்பு மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள்,நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற** தொழிலாளர்**கள் மற்றும்** பாதிப்புக்கு **இலக்காகக்கூடிய சமுதாயங்களுக்கான நிவாரணப் பணிகள்**

## இலங்கையில் கொவிட் -19 பிரதிபலிப்பின் பின்னணி

துரிதமாகப் பரவிவருகின்ற கொவிட் – 19 வைரசிற்கு பிரதிபலிப்புச்செய்து உலக சுகாதாரத் தாபனம் 2020 பங்குனி 11ஆம் திகதி நோயின் பரம்பலை உலகளாவிய ரீதியில் பெருவாரியாகப் பரவுகின்ற நோயாகப் பிரகடனஞ் செய்தது. உலகம் முழுவதிலும் ஏனைய அனைத்து நாடுகளைப்போன்றே இலங்கையும் தனித்துவமான மற்றும் வழமைக்குமாறான வழிமுறைகளின் ஊடாக அதற்குப் பிரதிபலிப்புச் செய்தது. அவ்விதமாக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் மத்தியில் நோய்த்தொற்றினை தடுக்கும்பொருட்டு முழுத் தீவையும் முடக்கிவிடக் காரணமாக அமைந்த கடுமையாக அமுலாக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் மூலமாகப் பிரயாணங்களை மட்டுப்படுத்துதல் உள்ளடக்கப்பட்டது.

இலங்கையின் முதலாவது கொவிட் – 19 தொற்றுக்குள்ளானவர் 2020 தை 27ஆம் திகதி பதிவாகினார். பங்குனி மாதத்தின் முதலாவது வாரமாகும்போது 16 பேர் மருத்துவ மேற்பார்வையின்கீழ் இருந்தனர். சித்திரை மாதத்தின் மூன்றாவது வாரத்தில் பொதுத் தேர்தலை நடாத்தும் எதிர்பார்ப்பில் பங்குனி 2ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதோடு பங்குனி 12 தொடக்கம் 19 வரை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான காலப்பகுதியாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான காலம் நிறைவடைந்த பின்னர் பங்குனி 20ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் மூலமாக விதிக்கப்பட்ட முடக்கிவிடலுடன் கொவிட் – 19 பெருவாரியாகப் பரவும் நோய் சம்பந்தமான இலங்கையின் கூட்டுப் பிரதிபலிப்பு தொடங்கியது.

பாராளுமன்றமொன்று இல்லாமையின்பேரில் கொவிட் – 19 பிரதிபலிப்புக்காக ஜனாதிபதி பணிப்புரை ஊடாகவே தலைமைத்துவம் வழங்கப்பட்டது. "சுகாதார சேவைகள் மற்றும் ஏனைய சேவைகள் பொதுமக்களுக்குச் சேவைகளை வழங்குவதற்காகச் சிறப்பாகத் தயார்செய்யப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தும்பொருட்டுத் தடுப்பு மற்றும் முகாமைத்துவ வழிமுறைகளை இணைப்பாக்கம் செய்யும்பொருட்டு"கொவிட் – 19 பெருவாரியாகப் பரவுகின்ற நோயைத் தடுப்பதற்கான தேசிய தொழிற்பாட்டு நிலையத்தின் தலைமையை வகிக்க இராணுவத் தளபதி திரு. ஷவேந்திர த சில்வா நியமிக்கப்பட்டார். அதற்கு மேலதிகமாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் ஜனாதிபதியவர்களின் சகோதரரான திரு. பசில் ராஜபக்ஷவின் தலைமையிலான ஜனாதிபதி செயலணியொன்று பங்குனி 26ஆம் திகதி நிறுவப்பட்டது. கிராமிய பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுகளைக் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முதன்மை வழங்கி நேரடியாகவே பாவனையாளர்களுக்கு வழங்குதலை உள்ளிட்ட 'ஒட்டுமொத்த மக்கள் வாழக்கையை பேணிவருவதற்காக இடையறாத சேவை வழங்குதலுக்கு வழிகாட்டுதல்,இணைப்பாக்கம் செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தலே'அதன் செயற்பொறுப்பாக அமைந்தது. கொவிட்'– 19 பெருவாரியாகப் பரவும் நோயினால் தோன்றி உலகளாவிய மற்றும் உள்நாட்டு அதிர்ச்சியின் மத்தியில் பொருளாதார

மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நெறிப்படுத்துவதற்காக அதிவிசேட தத்துவங்களைக்கொண்ட பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி ஊடாக 2020 சித்திரைமாதத்தில் இச்செயலணி மீளநிறுவப்பட்டது. அது அரச நிறுவனங்கள் மற்றும் பல்வேறு முகவராண்மைகளுக்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்கும். திரு.பசில் ராஜபக்சவே அதற்குத் தலைமை வகிக்கிறார்.

இம்மீளாய்வு மற்றும் அதற்குப் பின்னர் காட்டப்பட்டுள்ள கொள்கை விதப்புரைகள் நகர்சார் வறிய மக்கள் மற்றும் கொழும்பின் வருமானம் ஈட்டுகின்ற சமுதாயங்கள் மீது கொவிட் -19 பிரதிபலிப்பின் தாக்கத்துடன் ஏற்புடையதாக அமைவதோடு ஒருசில பாதிப்புக்குள்ளான குழுக்களின் இடையீடு மற்றும் அவசியப்பாடுகளைப் பொதுவிற் கலந்துரையாடி வருகின்றது. இக்கருத்துரைகள் அடிப்படையில் சமூகப் பொருளாதாரச்சிக்கல்கள்மீது கேந்திரமயமாவதோடு அச்சமுதாயங்களுடன் தொடர்புடைய பொதுச்சுகாதாரப் பிரதிபலிப்புகள் சம்பந்தமாக விசாரித்தறிவது கிடையாது. எவ்வாறாயினும் பெருவாரியாகப் பரவுகின்ற நோய் அதற்காகக் காட்டிய பிரதிபலிப்புகளின் தன்மை மற்றும் மேற்சொல்லப்பட்ட பிரதிபலிப்புகளின் பெறுபேறுகள் குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் வறிய மக்கள்மீது மிகவும் வித்தியாசமான மற்றும் சமமற்றவகையில் தாக்கமேற்படுத்தியது என்பதை ஆரம்பத்திலேயே கூறிவைக்க நாங்கள் விரும்புகிறோம். இங்குள்ள மீளாய்வு மற்றும் அதன்பின்னர் காட்டப்பட்டுள்ள விதப்புரைகள் வேரூன்றியுள்ள முறைமையொன்றின் கட்டமைப்புச் சார்ந்த ஏற்றத்தாழ்வுகளின் பெறுபேறே இம்மாற்றங்களின் பிரதிபலிப்பாகும்.

உலகின் பெரும்பாலான இடங்களிற் போன்றே இலங்கையிலும் நகர்சார் வறிய மக்களுக்கு சாதகமான உட்கட்டமைப்பு வசதிகளும் சேவைகளும் நிலவுவதில்லை. அதிக நெரிசலுடனான சமுதாயங்களில் வசிக்க அவர்களை நிர்ப்பந்தித்துள்ளதோடு அதற்கிணங்க சமூக இடைவெளி முற்றாகவே நடைமுறைச் சாத்தியமற்றதாக மாறியுள்ளது. கடுமையான பெருவாரியாகப் பரவுகின்ற நோய்க் காலத்தில் இச்சமுதாயங்கள் மேலதிக சுகாதார அபாயத்திற்கு முகங்கொடுப்பதோடு ஏற்கெனவே நிலவுகின்ற பாதுகாப்பற்றநிலைமை காரணமாக அவை மேலும் சிக்கலானவையாக மாறுகின்றன. இதற்கு மேலதிகமாக முடக்கிவிடலுடன் தோன்றிய கவனத்திற்கு இலக்காகவேண்டிய முக்கியமான காரணமாக அமைந்தது யாதெனில் ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களின் அபாயத்திற்கு இலக்காகிய பெரும்பாலான குழுக்களும் வறுமைக்கு இலக்காகியமை மூலமாக வறுமைநிலை உண்மையிலேயே அதிகரிக்கக் காரணமாக அமைந்த வருமானம் அற்றுப்போனமையாகும். அத்துடன் உணவு,போசாக்கு மற்றும் அடிப்படைச் சுகாதாரரீதியான பாதுகாப்பற்றநிலை உருவாகி இருந்தது. ஒருசிலருக்காகக் குறிப்பாகப் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக உரிய நேரத்தில் மட்டுப்படுத்தப்பட்ட சுற்றாடல்,வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் பற்றிய அச்சுறுத்தல் உருவாக்கப்பட்டது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான பிரதிபலிப்பின்போது இவ்வனைத்து விடயங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

கடுமையாக அமுலாக்கப்பட்டஐம்பதுநாட்களுக்கு மேற்பட்ட முடக்கிவிடலிலும், முடக்கிவிடலில் இருந்து விலகுவதன் மந்தகதியிலான நிலைமாறுகாலத்தின் பின்னர் அரச பிரதிபலிப்பு பெண்கள்,சிறுவர்கள்,முதியோர்கள் மற்றும் ஊனமுற்ற பிரிவினரை உள்ளிட்ட நகர்சார் வறிய மக்களும் அபாயத்திற்குஇலக்காகியுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயங்களுக்கு உதவும்பொருட்டு சமூக மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டும். இயல்புநிலைக்கு வருகையில் தொழில்கள் மற்றும் வருமானப் பிறப்பாக்க வழிமுறைகள் அற்றுப்போகின்றமை காரணமாகத் தோன்றி நிதிசார் உறுதியற்ற தன்மை,மேலதிக சுகாதாரப் பாதிப்புகள்,உணவு மற்றும் போசாக்குத் தொடர்பான பாதுகாப்பற்ற தன்மைகள்,ஏழ்மை மற்றும் கடன்படுநிலை உக்கிரமடைகின்றமை போன்ற வறிய மக்கட்குழுக்கள் முகங்கொடுத்துள்ள புதிய அபாயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

## கொழும்பு மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயங்களின் நிலைமை

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக கொழும்பு நகரத்தின் நாகர்சார் வறிய சமுதாயம் பலதரப்பட்ட ஆட்களைக் கொண்டதாக அமைவதோடு அவர்கள் எண்ணிக்கைரீதியாக அரை மில்லியனை விஞ்சுகின்றனர்.[1] அவர்கள் நகரத்தில் பரவலாக உள்ளபோதிலும் தெமட்டகொட, வனாத்தமுல்ல, கொட்டாஞ்சேனை, கிருளப்பனை போன்ற பிரதேசங்களில் சார்புரீதியாக பெரிய சமுதாயங்களாக வசிப்பதோடு அப்பிரதேசங்களின் சனத்தொகை அடர்த்தி ஏனைய பிரதேசங்களைப் பார்க்கிலும் உயர்வானது. 2009 வைகாசி மாதத்தில் யுத்தம் முற்றுப்பெற்றதும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நகர்சார் மறுமலர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகக் கொழும்பை "உலக மட்டத்திலான நகரமாக" மாற்றப்பட உத்தேசிக்கப்பட்டிருந்தது. அப்போதைக்குப் புதிதாக நிறுவப்பட்டிருந்த பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின்கீழேயே நகர அபிவிருத்தி அதிகாரசபை இயங்கியதோடு 65,000இற்குக் கிட்டிய பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த வறிய குடும்பங்கள் (பிரதானமாக கொம்பனித்தெரு,டொரிங்டன்,நாரஹேன்பிற்ற பிரதேசங்களில்) கொழும்பு நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள தமது வீடுகளிலிருந்து நகரத்தைச் சூழவுள்ள தெமட்டகொட,ஹேனமுல்ல,சாலமுல்ல போன்ற பிரதேசங்களில் அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி வீடுகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்விதமாக நகர்சார் வறிய சனத்தொகையின் கணிசமான பகுதியினருக்குத் தமக்குப் பழக்கப்பட்ட சுற்றுச்சூழலில் இருந்து,சமுதாயங்களிலிருந்து மற்றும் வாழ்வாதாரங்களிலிருந்து நீங்கவும் புதிய வாழ்க்கை முறைகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பழக்கப்படுத்திக்கொள்ளவும் நிர்ப்பந்திக்கப்பட்டது. அவ்விதமாக மீண்டும் மீள் இடவமைவு செய்யப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்புச் சிக்கல்கள்,கடன்,கவனிப்பு மற்றும் உறவினர்களுக்கு வலையமைப்பு சீர்குலைந்தமமை,இடவசதியும் தனிமனிதர் நிலையும்இன்மை, வாழ்வாதாரம் மற்றும் வருமானப் பிறப்பாக்கம் அற்றுப்போனமை போன்ற பல்வேறு சிரமங்களுக்கும் வசதியீனங்களுக்கும் முகங்கொடுக்க நேரிட்டதோடு இவ்வனைத்துப் பெண்களுக்கும் ஏறுமாறானவகையில் தாக்கமேற்படுத்தியது.

நகர்சார் வறிய பிரிவினர்சுயதொழில்புரிபவர்களிலிருந்து நாளாந்த சம்பளம் பெறுனர்கள் மற்றும் அமயத் தொழிலாளர்களாகப் பெரும்பாலான மற்றும் பல்வேறு தொகுதிகளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். முடக்கிவிடுதல் மூலமாக விதிக்கப்பட்ட வரையறைகள் புலம்பெயர் ஊழியர்களின்,வாடகை வீடுகளில் வசிப்பவர்களின் மற்றும் சமையலறைகளுக்கான அணுகுமுறை இன்மை காரணமாகச் சாப்பாட்டுக் கடைகள் அல்லது மக்கள் வழங்குகின்ற உணவில் தங்கியிருக்கின்ற வீடுகள் இல்லாத மக்கட்தொகையினர்மீது கரிசனைகொள்ளத் தவறிவிட்டது.அத்துடன் ஊனமுற்ற பிரிவினர்,வயது முதிர்ந்தவர்கள், தனியான பெண்கள் மற்றும் ஆண்கள் போன்றவர்களின் விசேட தேவைகளும் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

முடக்கிவிடலுக்குப் பிற்பட்ட நிலைமாறுகாலத்தில் பரிகாரங்கள் இடப்படவேண்டிய அபாயத்திற்கு இலக்காதல் பற்றிய ஏனைய காரணிகளும் முடக்கிவிடுதலினால் மேலோங்கச் செய்விக்கப்பட்டது. வீட்டுப் பணியாளர்கள்,உணவு வியாபாரிகள்,சாப்பாட்டுக் கடைகள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகளில் சேவையாற்றுபவர்கள் போன்ற தொழிற்குழுக்களுக்கிடையிற் பொருளாதாரப்பாதிப்பிற்கு இலக்காகக்கூடியவர்களாக இனங்காணப்பட்டனர். பாதகமான அழுத்தங்களுக்கு இலக்காகிய மற்றுமொரு பிரிவினர் தான் கொழும்பு நகரத்தில் குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்குப் பாரியளவில் தொழில்களை வழங்கிய ஆடை தைப்பவர்கள், சிகையலங்காரம் செய்பவர்கள்,சாரதிகள் மற்றும் போக்குவரத்துப் பிரிவு, சுற்றுலாப் பிரிவு, சிற்றுண்டிச்சாலைப் பிரிவு,நிர்மாணப் பிரிவு, உணவு மற்றும் பண்டங்களின் சில்லறை வியாபாரம் போன்றவற்றின் ஊழியர்களாவர். இந்த ஊழியர்கள் நகர்சார் வறியவர்களாக வகைப்படுத்தப்படவில்லை என்பதோடு சமுர்த்தி போன்ற நலன்புரி நன்மைகளுக்கு உரிமை பெறுவதில்லை.

---

[1] CPA, April 2014, Forced evictions inColombo: The Ugly price of beautification https:www.cpalanka.org./forced-evictions-the-ugly-price-of- beautification

இலங்கை முடக்கிவிடுதல் வரையறைகளை விதிக்கையில் துர்ப்பாக்கியமாக நாளாந்தச் சம்பளம் பெறுனர்களின் பல்வகைமை,மக்கள் கழிக்கின்ற ஆபத்துமிக்க வாழ்க்கை,வாழ்வாதாரம் திடீரென அற்றுப்போனமை போன்ற விடயங்கள் போதுமானவகையில் கவனத்திற் கொள்ளப்படவில்லை. அதற்கு மேலதிகமாக சமூக இடைவெளிமயமாக்கல் மற்றும் மிகவும் உயர்வான துப்பரவேற்பாட்டு மட்டம்அவசியப்பட்ட பெருவாரியாகப் பரவுகின்ற நோய்க்கானபொதுச் சுகாதாரப் பிரதிபலிப்பு நகர்சார் வறிய மக்களுக்கு வசிக்க நேர்ந்துள்ள அதிக நெரிசல்கொண்ட குறைந்த வளங்களைக்கொண்ட பிரதேசங்களில் சாதிக்க இயலாததாக அமைந்தது.

நாளாந்தச் சம்பளத்தைக்கொண்ட தமது தொழில் அல்லது தாம் ஈடுபட்டிருந்த ஏதேனும் வாழ்வாதார செயற்பாடு காரணமாக முகாமைசெய்துகொள்ளக்கூடிய மற்றும் ஓரளவுக்கு வசதியான வாழ்க்கையைக் கழித்த மக்களின் நிலைமை ஓரிரவில் மாற்றமடைந்தது.

பெருவாரியாகப் பரவுகின்ற நோய் மற்றும் அதற்குக் காட்டிய பிரதிபலிப்பு வறிய மக்களின் பாதிப்புத்தன்மையை அதிகரித்ததோடு நகரத்தின் குறைந்த வருமானம் பெறுனர்கள் உயிர்வாழ்வதற்கான தீவிர போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் அவர்களை மென்மேலும் கடன்படு நிலைக்குத் தள்ளிவிட்டது. பிரத்தியேகத் தொழில்முயற்சியாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்க உதவுவதற்காக மத்திய வங்கி கடன் மீளச்செலுத்தலுக்கான பிற்போடப்பட்ட காலப்பகுதியை வழங்கியபோதிலும் இந்நன்மைகள் நுண்ணிதியியல் பிரிவு [2] மற்றும் முறைசாராத பிரிவில் உள்ள பெரும்பான்மையினர் தமது அடிப்படைச் செலவுகள் தமது வருமானத்தை விஞ்சிச் செல்கின்ற மற்றும் தமது கடன்கள் தாக்குப்பிடிக்காத மட்டத்தில் நிலவுகின்ற வறிய மக்களுக்கு உரித்தாகவில்லை. சமூகப் பாதுகாப்பு மற்றும் சேவைகள் இன்மை அவர்களை மேலும் நிர்க்கதிநிலைக்கு மாற்றிய தமது கடன்படுநிலை தொடர்பில் அவர்கள் தனித்தனியாக செயலாற்றுதல் எதிர்பார்க்கப்பட்டது.

**நிவாரண வழிமுறைகள்**

முடக்கிவிடல் காலப்பகுதிக்குள் சார்புரீதியாக மிகவும் சீக்கிரமாக உதவிபெற்ற வறிய பிரிவினர் மத்தியில் சமுர்த்தி நலன்பெறுனர்கள் இருந்தனர். அதற்கு மேலதிகமாகக் குறைந்த வருமானம் பெறுனர்களுக்குக் குறிப்பாகத் தமது வாழ்வாதாரத்தை இழந்த மற்றும் முறைசார் மற்றும் முறைசாரா பிரிவின் தொழிலுக்கான அணுகுல் அற்றவர்களுக்காக மேலும் ரூ.5000 வழங்கப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் கீழ் அண்ணளவாக 1.9 மில்லியன் குடும்பங்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ளத் தகைமை பெற்றுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டது.[3] அவர்கள் மத்தியில் ஆசிரியர்கள்,தனியார் பஸ்வண்டி நடாத்துனர்கள்,ஆயுர்வேத மருத்துவப் பேரவை,தொழிலாளர்கள்,தேயிலை சிறுபற்றுநில உடைமையாளர்கள்,மாகாண நிருபர்கள்,முச்சக்கரவண்டிச் சாரதிகள்,லொத்தர் வியாபாரிகள் காணப்பட்டதோடு அவர்கள் அனைவரும் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் தகவுதிறன்களுக்குக் கட்டுப்பட்டனர். மூத்த பிரசைகள், விசேடதேவைக்குட்பட்டோர் மற்றும் வருமானம் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்த சிறுநீரக நோயாளிகளும் இவ்வுதவிகளுக்கான உரிமையைப் பெற்றனர். கொடுப்பனவு வழங்கப்படுதல் பங்குனி 30ஆம் திகதி அறிவிக்கப்பட்டதோடு அடிப்படையில் முடக்கிவிடப்படல் காரணமாகத் தமது வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கே அது உரித்தானது. [4] இது செலுத்தப்படுவதை அறிவித்த அரசாங்கச் சுற்றறிக்கை இதனை மாதாந்தக் கொடுப்பனவென உறுதிமொழி பகன்றது. இதன் பதிவுசெய்தல் முறையியலுக்கு அமைவாகத் தகைமைபெறுவதற்கான தகவுதிறன்களைப் பூர்த்திசெய்வதற்காகப் போதியளவிலான தகவல்களை வழங்க அதற்காக உரிமைபெறவாய்ப்புள்ள நலன்பெறுனர்களுக்கு நேரிடும். தமது தொழில்களுக்குத் தாக்கங்கள் ஏற்பட்டவர்களுக்குக் கிராம சங்கத்தின் விதப்புரையைப் பெற்று அதனை ஏற்புடைய பிரதேச செயலாளரால் உண்மையானவை என உறுதிப்படுத்திக்கொண்டு கிராம அலுவலரின்கீழ் நிறுவப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட குழுவிற்குச் சமர்ப்பிக்கவேண்டி நேரிட்டது. குழு அங்கத்தவர்கள்

2 http;//www.cadtm.org/Tackle-the-Household-Debt-Pandemic-Cancel-Debt-creat-Common-Credit

3 Circular, April 15th, 2020, Providing a 5000/- Rupee allowance, under the funding scheme, to those affected due to the COVID – 19 pandemic, Prime Minister's Office http://www:pmoffice.gov.lk/download/press.D0000000009 EN.pdf

4 Circular, presidential Secretariat, March 30 th, 2020, relief measures to low – income families and individuals who are vulnerable to COVID – 19 https://www.presidentsoffice.gov.lk/wp-content.uploads.2020/04.circular192020-sinhala.pdf

அனைவரும் ரூ. 5000 கொடுப்பனவின் ஒவ்வொரு நலன்பெறுனரையும் கூட்டாக அங்கீகரிக்கவேண்டி நேரிட்டது. உள்ளூராட்சி நிறுவனத்தின் உறுப்பினரொருவர்,கிராம அலுவலர்,குடும்பச் சுகாதார சேவகரொருவர்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட குழுவில் குறைந்தபட்சம் ஐந்து அங்கத்தவர்கள் இருத்தல் வேண்டும்.

**முடக்கிவிடல் மூலமாகத் தோன்றிய சவால்கள்**

ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டு ஒருசில தினங்களில் கொழும்பின் குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் வறிய வதிவாளர்களிடம் மேலதிக உணவு இன்மையால் தமது உணவுகள் படிப்படியாக நிறைவடைந்ததும் அவர்கள் போசாக்கினைப் பொருட்படுத்தாமல் உணவு வேளைகளினைக் குறைக்கத் தொடங்கினர்.

இம்மட்டுப்படுத்தல்கள் கணிசமான எண்ணிக்கைகொண்டவர்களான ஊனமுற்ற ஆட்கள்,நோயாளிகள், முதியோர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், வாடகை வீட்டுவதிவாளர்கள்மற்றும் வீடு இல்லாதவர்களையும் கருத்திற் கொள்ளவில்லை. வீட்டு வாடகை,பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல்கள், அடகுகள் மற்றும் கடன் மீளச் செலுத்துதல்,பாடசாலைக் கட்டணங்கள்மற்றும் மாதாந்த விதந்துரைக்கப்பட்ட மருந்துகள் போன்ற செலவுகளுடன்நிதிசார் பாதிப்பு உயர்வடைந்தது. இத்திரண்ட நிதிசார் செலவுகள் குறிப்பாகத் தமக்குப் பழக்கப்பட்ட வாழ்வாதாரங்களை மீண்டும் ஆரம்பிக்க இயலாதவர்களுக்காக முடக்கிவிடப்பட்ட காலப்பகுதிக்குப் பிற்பட்டகாலத்திலும் தொடர்ச்சியாக அவர்களுக்குச் சுமையாக அமைந்தது.

ஏதேனுமொரு செலுத்துதலை பெற்றுக்கொண்ட முதலாவது குழுவினராக அமைந்தவர்கள் சமுர்த்தி நலன்பெறுனர்களே. இது நன்றாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு சிறப்பாக இயங்கியது. எவ்வாறாயினும் மேலும் ஒருசில பிரதேசங்களில் கொடுப்பனவினை பெற்றுக்கொள்ளல் சிரமமானதாக அமைந்ததோடு கிராம அலுவலர் அலுவலகங்களில் நீண்டகாலத்தைக் கழிக்கவும் பலதடவைகள் அங்கு சென்றுவரவும் நேர்ந்தது. தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான உத்தியோகபூர்வ வழிமுறைக்கான அணுகல் பெரும்பாலான மக்களுக்கு இல்லாமை மற்றும் உரிய வழிகாட்டல்கள் மக்களுக்கு வழங்கப்படவில்லையாதலால் ரூ.5000 கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதும் சிக்கலானதாக அமைந்தது. மேற்படி கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளத் தகைமையற்றவர்களாக இருந்தவர்கள் மத்தியில் வாடகை வீடுகளில் வதிபவர்களும் இருந்தனர். ஒன்றாக வசிக்கின்ற கூட்டுக் குடும்பங்கள் மத்தியில் (பாட்டாளி வர்க்கத்தின் வறிய சமுதாயங்களைச்சேர்ந்த பெரும்பாலான குடும்பங்கள் போல்) ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் கொடுப்பனவிற்கு ஒரு குடும்பம் மாத்திரமே உரிமை பெற்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தகைமைபெறுவதற்கான தகவுதிறன்களைப் பூர்த்திசெய்ய அவசியமான ஆவணங்கள் மக்களிடம் இருக்கவில்லை. பெரும்பாலானோருக்கு மேன்முறையீட்டுக் கடிதங்களை எழுத நீண்ட நேரத்தைச் செலவிட நேரிட்டது. ரூ. 5000 கொடுப்பனவு மாதாந்தம் செலுத்தப்பட எதிர்பார்க்கப்பட்டபோதிலும் (முடக்கிவிடல் ஐம்பது நாட்களுக்கு மேலாக நிலவியதோடு கொழும்பின் ஒருசில பிரதேசங்களில் இக்காலப்பகுதி மேலும் நீடிக்கப்பட்டது.) ஒரு தடவை மாத்திரமே செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டதோடு வைகாசி மாதத்திற்கான செலுத்துதல் பெரும்பாலான பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவில்லை. அவ்விதமாக பணம் செலுத்துதல் நன்மைபயக்கத்தக்க ஒன்றாக அமைந்தபோதிலும் மாதாந்தம் மக்கள் ஏற்கவேண்டிய செலவுகளுடன் ஒப்பிடுகையில் போதுமானதாக அமையவில்லை. எனினும் குறைந்தபட்சம்உணவு மற்றும் உலர் பங்கீட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அதன் மூலமாக ஓரளவு இயலுமை கிடைத்தது.

வருமானத்தை இழந்ததும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்காகத் தமது சேமிப்புகளை ஈடுபடுத்த வேண்டிய கட்டாயநிலை வறிய குடும்பங்களுக்கு ஏற்பட்டது. சேமிப்புகள் இல்லாதவர்களும் தமது சேமிப்புகள் அனைத்தும் தீர்ந்தவர்களும் வேறு குடும்பங்களிலிருந்து அல்லது சமுதாயத்திடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொண்டதோடு பெரும்பாலானோருக்கு அன்றாட பொருளாதார சிரமங்களுடன் கடன் மீளச்செலுத்துதல் சுமையும் சேர்ந்ததால் பணத்தைக் கடனுக்கு வழங்குபவர்களின் தயவினை நாடவேண்டிய நிலையேற்பட்டது. தமது குடும்பங்களுக்கு உணவு வழங்கவேண்டிய சுமையை ஏறுமாறாக ஏற்கவேண்டியநிலை பெண்களுக்கு எற்பட்டது. உணவு

சமைத்தல்,சுத்தஞ்செய்தல் மற்றும் பிள்ளைகளைக் கவனித்தல் பற்றிய பொறுப்பினை வகிப்பதோடு கிராம அலுவலர் அலுவலகத்திற்கு அல்லது கூட்டுறவுச் சங்கத்திற்குப் பலதடவைகள் செல்லவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டதோடு, சிறுவர்களை ஏதேனும் பணியில் ஈடுபடுத்தி உணவு, பானவகைகளை வழங்கவேண்டிய நிலையும் அவர்களுக்கு ஏற்பட்டது.

**ஆண்-பெண் சமூகநிலையின் பேரில் பாரபட்சம் காட்டுதல்**

தொகைமதிப்பு மற்றும் பிற உத்தியோகபூர்வ ஆவணங்களில் பெரும்பாலும் பிரதான குடியிருப்பாளராக ஆண்களே குறிப்பிடப்படுகின்றனர். அதன் விளைவாக நிவாரண அளிப்புகளை குறிப்பாக நிதிசார் தன்மைகொண்ட அளிப்புகளைப் பெறுபவர்களாக உத்தியோகபூர்வரீதியாக ஏற்றுக்கொள்ளலுக்கு இலக்காகின்றவர்கள் ஆண்களாவர். ரூ.5000 செலுத்துதலை அறிமுகஞ்செய்ததும் ஒருசில சந்தர்ப்பங்களில் அளிப்புக்காக பதிந்துகொள்ள அனுமதி வழங்கப்படுவது ஆண்களுக்கு மாத்திரமே எனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இது பரவலாக இடம்பெறாவிட்டாலும் கிராம அலுவலர்களால் நேரடியாக ஆண்களுக்குக் கொடுப்பனவு செலுத்தப்படுவதாக ஒருசில பெண்கள் உறுதிசெய்துகொண்டனர். ஆண்களுக்கு அத்தகைய கொடுப்பனவு கிடைக்கும்போது அவர்கள் பணத்திற்கான ஒரேயொரு நன்மைபெறுபவராக மாறுகிறார்கள் என்பதைப் பல பெண்கள் உறுதிசெய்கிறார்கள். போதைப் பொருட்களுக்கு இரையாகிய ஆண்கள்மதுபானம்,போதைப்பொருள் அல்லது புகையிலைக்காகக் கொடுப்பனவின் பெரும்பகுதியைச் செலவிடுவதோடு குடும்பத் தேவைகளுக்காக அப்பணத்தைச் செலவிட மறுக்கின்றனர். அவர்களின் கணவன்மார்கள் பராமரிப்புத் தொகைகளை (ஜீவனாம்சம்) செலுத்துவதைத் தவறவிடுதல் அல்லது தப்பியோடியதன் காரணமாகப் பணத்திற்கான அணுகலின்றி நிர்க்கதியுற்ற மற்றும் அவர்கள் செயற்படாமையால் நீதிமன்றத்திற்குச் செல்ல இயலாத பெண்களையும் நாங்கள் சந்தித்தோம்.

**ஆண்-பெண் சமூகநிலை துன்புறுத்தல்**

நெருக்கமாகவும் முடங்கி வாழ்வதாலும் பெரும்பாலான குடும்பங்களுக்குப் பாதகமான உளச் சமூக தாக்கங்கள் ஏற்படுவது அவதானிக்கப்பட்டது. வீட்டுவன்முறை கணிசமான அளவில் பதிவாகி உள்ளது. பெண்கள் துஷ்பிரயோகத்தின் பாரதூரத்தன்மையை தாங்கிக்கொண்டிருத்தல் மற்றும் ஒருசில சந்தர்ப்பங்களில் சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் LGBTIQ+சமுதாயங்களில் ஆபத்திற்கு இலக்காகியுள்ளவர்களுக்கும் மனைசார் துர்ப்பிரயோகங்களை தாங்கிக்கொள்ளவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. வீட்டுவன்முறைக்கு ஏற்கெனவே இலக்காகியுள்ள பெண்களுக்கு வீட்டுக்குள்ளேயே சிறைப்பட்டு முடங்கிக்கிடக்கவேண்டி நேரிட்டுள்ளதால் அவர்களின் ஆபத்துகள் மேலும் உக்கிரமடைந்துள்ளதோடு அதற்குப் போதியளவிலான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள இயலாமல் போயிற்று. உதவிக்கான தொலைபேசிகள் நிறுவப்பட்டிருந்தபோதிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு அவற்றை அணுகுவதற்கான வழிமுறைகளும் இருக்கவில்லை. பெரும்பாலான வறிய பெண்களுக்கு அவ்வாறு செய்வதற்கான வழிமுறையோ தனியாள்நிலையோ கிடையாது. மாற்று வதிவிடங்களை வழங்குகின்ற சமுதாய ஒத்துழைப்பு இருக்கவில்லை. சிறுவர்களையும் முதியவர்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்பதால் அவர்களால் வீட்டைவிட்டுச்செல்ல இயலவில்லை. ஒருசில பெண்கள் ஊரடங்குச்சட்ட நேரத்தில் தமது கணவன்மார்கள் பற்றி அறிவிக்க விரும்பாமைக்கான காரணம் ஆண்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் எனவும், அவ்வாறு இடம்பெற்றால் கொவிட் – 19 வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து அதிகரிக்கும் என்ற பயம் காரணமாகவே ஆகும். ஒரே வருமானம் ஈட்டுபவர் துஷ்பிரயோகம் செய்பவராக அமைந்த வீடுகளில் அவர்மீது முறைப்பாடு செய்வதால் முழுக் குடும்பமுமே ஆபத்துக்கு இலக்காகும்.

## ஆபத்திற்கு இலக்காகக்கூடிய சமுதாயங்கள்

முதியோர்களும் விசேடதேவையுடையோரும்

நிகழ்கால பெருவாரியாகப் பரவுகின்ற நோய்நிலைமை முதியோர்களுக்கும் விசேடதேவையுடையோருக்கும் அதிகமான ஆபத்தை ஏற்படுத்துகின்றது. அவர்களின் பிரதான சிக்கல்கள் மத்தியில் உயர்வடைந்த சுகாதாரப் பாதிப்பு,இடப்பெயர்வு,தங்கியிருத்தல்,உதவிகளுக்கான தடையேற்பட்ட அணுகுதல், மட்டுப்படுத்தப்பட்ட இடப்பெயர்வாற்றல்மற்றும் வரையறுக்கப்பட்ட உணவு, பான வகைகள் என்பவை ஒருசிலவாகும். முடக்கிவிடப்பட்ட காலப்பகுதிக்குள் வயோதிபர்களினதும் மாற்றுத் திறனாளிகளினதும் பாதுகாப்பு மற்றும் நல்வழியுரிமை துரிதமாகக் கவனஞ்செலுத்தப்படவேண்டிய விடயங்களாகக் கவனத்திற்கொள்ளப்பட்டு அரசாங்கம் பெருவாரியாகப் பரவுகின்ற நோய்க் காலத்தில் வீட்டில் தங்கியிருப்பதற்கான விசேட வழிகாட்டல்நெறிகளை வெளியிட்டது. அரசாங்கத்தின் அவசர அளிப்புச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கக் கொடுப்பனவுக்காகத் தகைமைபெற்றுள்ள மூத்தபிரஜைகளுக்காக ரூ. 5000 பணத்தொகை வழங்கப்பட்டது. மாற்றாற்றல் மற்றும் விசேட தேவைகள் நிலவுகின்ற மக்களுக்கும் அதனையொத்த உதவிகள் வழங்கப்பட்டன. முதியோர் தொடர்பான தேசிய செயலகத்தின்படி முடக்கிவிடப்பட்ட காலப்பகுதிக்குள் 70 வயதிற்கும் மேற்பட்ட 3.1 மில்லியன் பேர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டது.

குறைந்தபட்ச மாதாந்த வருமானம் பெறுகின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற முதியோர்கள் உள்ள வீடுகளுக்குப் பொதுமக்கள் நலன்புரி உதவிக் கொடுப்பனவு,முதியோர் உதவிக் கொடுப்பனவு மற்றும் சமுர்த்தி மானியம் போன்ற கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டன. பொதுமக்கள் நலன்புரி உதவிக் கொடுப்பனவு மாற்றாற்றல் மற்றும் நாட்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள இளைஞர் மற்றும் ஆபத்திற்கு இலக்காகிய ஆட்களுக்காகவும் வழங்கப்படுகின்றது. தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள வீடுகளுக்காக வழங்கப்படுகின்ற மக்கள் நலன்புரி உதவிக் கொடுப்பனவு ரூ. 250இல் இருந்து ரூ.3000 வரையானதாக அமைவதோடு முதியோர் உதவி நிகழ்ச்சித்திட்டத் தொகை ரூ.1000இல் இருந்து 2000 வரையானதாக அமைகின்றது. அத்துடன் ரூ. 3000ஐ விடக் குறைவான மாதாந்த வருமானம் பெறுகின்ற 70 வயதிற்கும் மேற்பட்ட ஆட்களுக்காக ரூ. 2000 செலுத்துவதற்கான வேலைத்திட்டத்தை 2018 இல் அரசாங்கம் அறிமுகஞ் செய்தது.

குறைந்த வருமானம் பெறுகின்ற முதியோர்களுக்கான கொடுப்பனவு வேலைத்திட்டம் மூலமாக வழங்கப்படுகின்ற கொடுப்பனவு தாழ்ந்த மட்டத்தில் நிலவுவதோடு ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படுகின்ற கொடுப்பனவு ஒட்டுமொத்தப் பெருவாரியாகப் பரவுகின்ற நோய் காலப்பகுதி பூராவிலும் தமது அவசியப்பாடுகளை நிவர்த்திசெய்துகொள்ள போதியதாக இல்லாதிருப்பினும் வாழ்க்கையைப் பேணிவர மிகவும் முக்கியமானதாக அமைந்தது. நிலவுகின்ற வருமான ஏற்றத்தாழ்வுகள்,பல வருடங்களாகப் குறைந்த சம்பளம் ஈட்டுதல்,நீண்ட ஆயுள் மற்றும் குடும்பப் பொறுப்புப் போன்றவை காரணமாக முதிய பெண்கள் முதிய ஆண்களைப் பார்க்கிலும் மிகுந்த ஏழ்மையில் உயர் பாதிப்பை எதிர்நோக்கிவருவது பிரபலமான விடயமாகும்.

## LGBTIQ+சமுதாயமும் பாலியல்தொழிலாளர்கள்

நிலவுகின்ற பெருவாரியாகப் பரவுகின்ற நோய்நிலைமை காரணமாகத் தமது வாழ்வாதாரங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்ட பாலியல்தொழிலாளர்கள் சுகாதாரத்தையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்காகத் துரித வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்து UNAIDSஅமைப்பும் பாலியற் சேவைகள் கருத்திட்ட உலகளாவிய வலையமைப்பும் (NSWP)ஒருங்கிணைந்த மன்றாட்டமொன்றை முன்வைத்தது. பாரபட்சம் காட்டப்படுதலிலான சட்ட மற்றும் சமூக அபகீர்த்தி காரணமாக பாலியற்றொலிலாளர்களுக்குப் பெருவாரியாகப் பரவுகின்ற நோய்க் காலத்தில் பாதுகாப்பும் உதவியும் கிடைக்கவில்லை. பாலியல் தொழிலாளர்கள் உதவுவதற்கான வேண்டுகோளுக்கு அரசாங்கத்திடமிருந்து பிரதிபலிப்பு இல்லாமை மற்றும் அவர்களின் வருமானத்தை இழந்தமை காரணமாக அச்சமுதாயம் அதிக பாதிப்பு மிகுந்த அழுத்தத்திற்கும் இலக்காகிஉள்ளது. இக்காலப்பகுதிக்குள் அவர்களுக்கு கிடைத்த சிறிய எண்ணிக்கைகொண்ட வாடிக்கையாளர்கள் பாலியல் தொழிலாளர்களுக்கு வைரஸ் தொற்று

ஏற்படக்கூடிய மற்றும் ஊரடங்குச்சட்ட ஒழுங்குவிதிகளை மீறுகின்ற ஆபத்திற்கு அவர்களை இலக்காக்கி உள்ளது. அதன் மூலமாக ஒருபுறத்தில் தொற்று ஏற்படக்கூடிய பாதிப்பு மறுபுறத்தில் அவர்கள்மீது பாரபட்சம் காட்டுகின்ற உத்தியோகத்தர்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆபத்தைஎதிர்நோக்க நேரிடுகின்றது. அத்துடன் வைரஸைப் பரவச்செய்விப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுவதன் மூலமாக அவர்களைமென்மேலும் அபகீர்த்திக்கு இலக்காக்குகின்றது. அவர்களுக்குக் கிடைக்கின்ற சமூகமூல ஒத்துழைப்பு நிரந்தமானதாக அமைவதில்லை. அரசாங்கத்திடமிருந்து கிடைக்கின்ற நிவாரணங்களுக்கு அது பதிலீடாக அமையமாட்டாது. கொவிட்-19 பீடிக்கப்படுவதற்கான அவர்களின்பாதிப்பினைக் கருத்திற் கொள்ளும்போது நிதிசார் நிவாரணம் இப்பாதிப்பைத்தடுத்து அவர்களை பொருளாதாரரீதியில் பலப்படுத்தி நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்கின்றது.

மேலும் கொழும்பு நகர்சார் குறைந்த வருமானக் குடியேற்றங்களில் வசிக்கின்ற கரையோர சிறுவர்கள்,நாச்சி மற்றும் ஜோகி ஆட்டக்காரர்கள் மற்றும் LGBTIQ+சமுதாயத்தின் அங்கத்தவர்களை கடுமையான தாக்கத்திற்கு இலக்காக்கி உள்ளது. வருமானத்தை இழந்தமைமற்றும் அதன் விளைவாக உணவு மற்றும் போசாக்கு நலிவடைந்தமை வெகுவாக வியாபித்தமையால் இச்சமுதாயத்தில் வறுமையால் வாடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதற்கு மேலதிகமாகக் குறைந்த சம்பளம் பெறுகின்ற LGBTIQ+சமுதாயத்தில் பெரும்பாலானவர்கள் குறிப்பாக பொருளாதாரரீதியாக பாதிப்புமிக்க தொழில் முயற்சிகளிலும் இணைத்தளத்தின் ஊடாக மேற்கொள்ள இயலாத அரச சார்பற்ற அமைப்புகள் நடைமுறைப்படுத்துகின்ற கருத்திட்டங்களிலும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது உணவுரீதியான மற்றும் உணவுரீதியற்ற அவசியப்பாடுகளை நிவர்த்திசெய்கையில் பொருளாதார இன்னல்களையும் சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

பாலியல்சார் நாட்டம்,ஆண்-பெண் சமூகநிலை அடையாளம்,ஆண்-பெண் சமூகநிலை வெளிப்பாடுகள் மற்றும் பாலியல்சார் பண்புகள்(SOGIESC) சமுதாயங்களின் அங்கத்தவர்கள் தொழிலின்மை காரணமாகவும் அவர்களில் பெரும்பாலானோர் நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற அல்லது முறைசாராத பிரிவில் உள்ளவர்கள் மற்றும் அதனாலேயே ஊழியர் உரிமைகள் மீதான அணுகல்கள் இல்லாமை காரணமாக அவர்களிடம் நிலவுவது மட்டுப்படுத்தப்பட்டநிதியங்களே என்பதால் தொழில்களுக்காக அவர்கள் இடம்பெயர்ந்துள்ள நகர்சார் பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள தற்காலிக வாழிடங்களில் சிறைப்பட்டுள்ளனர். அவர்கள்LGBTIQ+களாக அடையாளப்படுத்தப்படுவதால் அந்த அடிப்படையில் மேலதிக பாதுகாப்புஇன்மையை அவர்கள் முகங்கொடுப்பதோடு நிவாரணங்களுக்காகப் பதிவுசெய்து கொண்டால் வழக்குத் தொடுக்கப்படுவதற்கான பாதிப்புக்கு அவர்கள் இலக்காவர். அவர்கள் மத்தியில் ஒருசிலருக்கு எந்தவிதமான ஒத்துழைப்பினையும் வழங்காத / துஷ்பிரயோகத்திற்கு உள்ளான குடும்பங்களுக்கு மீண்டும் செல்லுமாறு நிர்ப்பந்தித்துள்ளது. பொருள்ரீதியான அவசியப்பாடுகளின் தட்டுப்பாடு நீங்கலாகத் தனிமைப்படுத்தப்பட்ட ஆட்கள் மனவெழுச்சி இடர்களின் பாதிப்பிற்கு இலக்காவதோடு அவர்களுக்கு உளச் சுகாதார உதவிகள் அவசியமாகின்றன.

நகர்சார் குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் வறிய சமுதாயத்தினரும் கொழும்பில் பாதிப்பிற்கு இலக்காகக்கூடிய ஏனைய குழுக்களுடன் செயலாற்றுகின்ற செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர் குழுவொன்றின் கருத்துகளை வினவிப் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைவினால் தயாரிக்கப்பட்டது.

---

**பங்களிப்பு நல்கியோர்**

இரோமி பெரேரா, விறே பல்தசார், குமுதினி சாமுவேல், நிர்மாணீ லியனகே, சன்சியா பிறவுன், ஹரினி பர்னாந்து, ஏப்ராயிம் ஷட்ரச்

**2020 ஆனி22**

Women and Media Collective
Established 1984

Women and Media Collective
56/1, Sarasavi Lane, Castle Street,
Colombo 08, Sri Lanka.
Email: wmcsrilanka@womenandmedia.org
Web: womenandmedia.org
Facebook: https://www.facebook.com/womenandmediacollective
Twitter: https://twitter.com/womenandmedia